❖

இரவின் கடிதங்கள்

நிஷாந்த் விக்னேஸ்வர் ர

இரவின் கடிதங்கள்

ஆசிரியர் : நிஷாந்த் விக்னேஸ்வர் ர

01

விதிகள் மீறியதற்கு அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன், அன்பைப் பெறுவதற்கும் சில விதிமுறைகள் இருப்பதென அறியாமலும் அவர்கள் அனுமதி கேட்காமலும் உரிமை எடுத்துக் கொண்டதற்காக...

❖

02

அவசியமற்ற இடத்தில் அவசியமான ஒன்றை தேடிக்
கொண்டிருக்கிறேன், வெறுப்பை உதிர்த்த இடத்தில்
பேரன்பை...

❖

தீர்ந்துப் போகத்தான் செய்யும் உன்னிடமிருக்கும் எனக்கான அன்பும், ஆனால் தீர்ந்துப் போகும் வரை திகட்ட திகட்ட கொடுத்திடு அது போதும்...

❖

04

வாசிக்காமல் வைத்திருக்கும் புத்தகம் போல் ஓரமாக அமைந்துள்ளது அவளிடம் சொல்லாத என் காதலும், ஆனால் இதுவரை அதன் மதிப்பும் குறைந்தபாடில்லை...

❖

05

யாரிடமும் பேசிக் கொள்ளாத எனக்கும் என் இரவுக்கும் என்ன சொந்தமோ ? அதனிடம் மட்டும் தான் அழுகிறேன், புன்னகைக்கிறேன், புலம்புகிறேன் அனைத்திற்கும் மேலாக ஆறுதலும் அடைகிறேன்...

❖

06

கால அவகாசமில்லா பிழைகளும் கால அவகாசமுள்ள
திருத்தங்களும் தான் வாழ்க்கையின் அவகாசம்...

❖

எதற்காக? என்பதற்காக. இவ்விரண்டில் தான் ஒவ்வொரு வாழ் நாட்களும் ஓட்டம் பிடித்துக் கொண்டிருக்கிறது...

❖

08

சபித்துவிட்டுச் சென்றுவிட்டாள், என்னை காதலித்துக்
கொண்டே அவ்வப்போது பிழைத்துக்கொள் என்று...

❖

09

வீதிகளில், தெரு விளக்குகளின் உழைப்பிற்கு
ஆதரவளிக்கிறது என் இரவுகளின் விலாசமற்ற விரக்திகள்...

❖

10

தவறி விழுந்தால் கூட தத்தளித்தாவது மேலே வந்துவிடு
தட்டித் தட்டி கீழே தள்ளி உனை புதைத்திட கூட்டம் எப்போதும் உள்ளது...

❖

11

வெளியாகக் காத்திருக்கும் கண்ணீருக்கு, கோழைத்தனம்
என்ற சான்றிதழ் எதற்கு ?

❖

12

உனை மறப்பது அவ்வளவு எளிதாக இருந்திருந்தால் விலகிய கணமே செய்திருப்பேன், இனி எத்தனை ஆண்டுகள் ஆனாலும் என் எண்ண ஓட்டத்தில் உன் நினைவிருக்கும் வரை மறப்பது அவ்வளவு எளிதல்ல...

❖

13

உன்னிடம் அன்பைச் செலுத்துவதில் எனக்கு
ஆட்சேபனையில்லை, ஆனால் மிச்சமுள்ள காதல் மீதான
நம்பிக்கையும் உன்னால் உடைக்கப்பட்டு விடக்கூடாதென்ற
ஒற்றை கோரிக்கை தான்...

❖

14

பிழைகள் இருந்த போது திருத்திக் கொண்டேன், ஆனால்
இன்று திருத்தியதை திருத்திக் கொண்டிருக்கிறேன்
திருத்தியதற்காக...

❖

15

காரணங்களுக்கும் காதலுக்கும் எப்போதும்
ஒத்துப்போவதில்லை, காதல் வருவதற்கு காரணம் தெரியாது,
பிரிவதற்கு காரணமில்லாமல் இருக்காது...

❖

16

மனமென்ன சொல்லும் புத்தி என்ன புகட்டும், என்பதிலேயே தினம் இரவுகள் முடிகிறது, மறு நாளுக்கான கேள்விகளும் விடிந்தவுடன் எழுகிறது...

❖

17

என்னவென்று தெரியாத எண்ணங்களும் எக்கச்சக்கமாய் புத்திக்குள் ஓடிக்கொண்டிருக்க, என்னிரு கண்களும் அதன் கடமையைச் செய்தது கண்ணீர்த் துளிகள் வரவழைத்து...

❖

18

பின் தொடரும் நிழலுக்கும் மனம் தொடரும் நிஜத்திற்கும்
தெரியும், இதுவரை கடந்து வந்த பாதையின் கனம்...

❖

இதுவரை அன்பைக் கொடுத்து மட்டுமே பழகிவிட்டேன்
கேட்டிட பழகவில்லை, அதுதான் அவளிடமும் நிகழ்ந்தது...

❖

எங்கே அவள் ? சென்றுவிட்டாள், அங்கேயே நீ ஏன் நிற்கிறாய் ?
என புத்தி கேட்க, காதலித்துவிட்டானல்லவா...!!! என்றது
மனம்...

❖

21

அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மட்டுமே நம் கையிலுள்ளது, நாம் அவர்களுக்கு முக்கியத்துவமாக இருப்பதல்ல...

❖

பழக்கப்பட்டுவிடும் என்று பலர் சொன்னாலும், பக்குவமடைந்த மனமிருந்தும் படித்துப் படித்துச் சொன்னாலும், பாவம் அதற்கு அவளைக் கடந்து வர தெரியவில்லை...

❖

23

வரத்தின் வழியாகவே சாபத்தையும் வாங்கிக் கொண்டேன்,
அதீத அன்பின் வழியாக பிரிவை...

❖

24

விருப்பத்தையும் விரும்பாமல் கொடுத்தவளுக்கு எப்படிப் புரியும் என் அவஸ்தைகள்...

❖

25

பயணிகளின் கனிவான கவனத்திற்கு கொஞ்சம் அன்பைச் செலுத்துங்கள், உங்கள் இறங்குமிடம் வரும்வரை...

❖

26

அவளை நினைத்திருக்க என் மனதின் துன்புறுத்தல்கள்
போதுமானது...

❖

27

இரு கைகளில் அடங்காத சம்பளம் என்றாலும் நம் உயரம் தாண்டிய செலவுகளிருக்கும், இவை அனைத்திற்கும் முற்றுப்புள்ளி, இறுதி ஊர்வலத்தில் செலவழிக்கும் நெற்றியின் ஒற்றை ரூபாய் நாணயம் தான்...

❖

முழுமையாகத் தான் உரைத்தேன் முழுவதுமாகத் தான்
உணர்த்தினேன், அவள் பெயர் முணுமுணுத்த என் மனதிடம்
கடந்து வாவென்று...

❖

29

நீ என்னை தண்டிக்கவில்லை என்றாலும் கண்டித்துக் கொண்டிருக்கிறாய் உன் நினைவுகளால், வேறாரிடமும் என் சிந்தனைகள் சென்றிடக் கூடாதென்று...

❖

30

தேடிக் கிடைத்த போதெல்லாம் தெரியவில்லை அவர்களுக்குத்
தேவைப்படும் போது மட்டும் என்னைத் தேடினர்களென்று...

❖

31

நிலுவையில் உள்ள பாடங்கள் கற்கும் முன்னரே புது வரவுகள்
எனக்கான பாடங்கள் கற்பிக்க படையெடுக்கின்றனர்...

❖

புன்னகைக்கும், கண்ணீருக்கும் சமத்துவம் சொல்லித் தந்தது இக்காதல்...

❖

33

தனிமையை பழகிக் கொண்டேன் என்று தினம் நான்
சொல்லும் பொய்யைத் தான் பழகிக் கொண்டேன்..

❖

34

நீ கேட்டபடி தூரத்தை தந்துவிட்டேன் உன்னிடமிருந்து என்னை மீட்டெடுப்பதில் உதவி செய் அதுபோதும், நான் முயற்சித்தும் முடியாதவாறு அன்பைச் செலுத்திவிட்டேன் அவ்வளவுதான்..

❖

35

பெரும்பாலும் மனதின் எதிர்ப்பார்ப்புகளுக்கு மனமே.!! சில நேரங்களில் ஒத்துழைப்பதில்லை, காரணம் அச்சம் கலந்த ஆசைகள்...

❖

36

சில பிழைகள் பல திருத்தங்கள் இவ்வளவுதான் வாழ்க்கை...

❖

கேட்கின்ற வினாக்கள் அனைத்திற்கும் விடைகள்
கிடைப்பதில்லை என்றாலும், கேட்பதை நிறுத்துவதில்லை என்
இரவுகளும்...

❖

எப்படி முடியும் ? கடைசி படியில் நிற்பவரிடம் இவ்வுறவு நிலைக்க,
இன்னும் இறங்கிட வேண்டுமென்றால்...

❖

39

யார் வேண்டுமானாலும் என் கரம் பிடித்து புலம்பல்கள்
கேட்கலாம், ஆனால் முடியும் வரை விலகக்கூடாது...

❖

40

பணம் இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் பிம்பத்தில் தான்
இங்கு பலரின் மரியாதை இடம்பெற்றுள்ளது...

❖

41

யாரும் கவனிக்காத போது அழுதுகொள்கிறேன் அனைவரும் கவனிக்கும் பட்சத்தில் சிரித்துக் கொள்கிறேன், மெய்களை ஒளித்து வைத்திருக்கும் பொய்கள் போல்...

❖

42

யாரோ கேட்டது போல் இருந்தது வாழ்க்கையில் அடுத்து என்ன செய்யப் போகிறாய் ? என்று, கூர்ந்து கவனித்தால் அது என் மனசாட்சியின் கூக்குரல்...

❖

முழுதுமாக உறங்கவில்லை முழுமையாக மறக்கவில்லை
காதலியை நினைத்தல்ல, காற்றோடு கலந்த என் குழந்தை
குணத்தை நினைத்து....

❖

44

காதல் என்பது, தவணை முறை மூளைச்சாவு...

❖

இருளில் தொலைந்தால் வெளிச்சம் நாடலாம் இருளுக்காகத்
தொலைந்திருக்கிறேன் நான் விரும்பி தேடிய நிழலும் அதுவே...

❖

46

உன்னுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டாலும், எனதன்பின்
கடைசிக் குமிழிகளில் உன் ஞாபகம்...

❖

பிரிவுகள் யதார்த்தமென்று பழக்கப்பட்டுவிட்டோம் பிழைகள் கண்களுக்குத் தெரிவதில்லை...

❖

வியர்வை நீரும் மழை நீரும் சேர்ந்து நனைத்த தேகங்கள்,
உள்ளுக்குள் பயம் வெளியில் நாணம் கடத்திய குடைக் கூடம்,
நான் ரசித்தபடி தான் நீ ரசித்திருக்க வேண்டுமென்ற
கட்டாயமில்லா இருவர் விழிகள், காதல் உரைக்கச் சந்தர்ப்பம்
தான் இடியுடன் கூடிய மழை சந்திப்பு...

❖

என்னை இழக்க தயங்காத பட்சத்தில் உன்னை இழக்க தயங்கினேன், தவித்திருந்தேன் தவிர்த்திருந்தேன் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை இனி கனவாக மட்டும் வரப் போகிறாய் என்று...

❖

ஒட்டடைகள் பிடித்த மனதை, உட்சுத்தம் செய்து ஒப்பனைகள்
செய்த அவளிடம், ஒன்றைச் சொல்லிட ஆசை, இனி
ஓய்வின்றி காதல் செலுத்துவேனென்று...

❖

விலகியதற்கு விளக்கம் கேட்டுக் கொண்டால் வீணாகிவிடும்
வாழ் நாட்கள்...

❖

52

வேண்டியதெல்லாம் கிடைத்துவிட்டால் வேடிக்கைகள் தான்
கற்சிலைகளும் காணிக்கைகளும் அருங்காட்சியகத்தில்...

❖

பொது நலம் கருதி வெளியிடப்பட்டது அன்பிற்கும் உண்டு
அடைக்கும் தாழ் இன்று…

❖

யாரேனும் அருகில் வந்து ஆறுதல் தந்தால் நான்
அச்சுறுத்தலுக்கு உள்ளாவது என் பிழையா ?

❖

கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடித்திருக்கலாம் பாவம் என்
கண்ணீரும் என்ன செய்யும் ? எதிரே நிகழ்வது
என்னவளென்று நினைத்து எனக்கானவளில்லை என்று
நிரூபித்தவளின் திருமணம்...

❖

இருளுக்கு இடையூறு வெளிச்சமென்று இருளும் கூறுவதில்லை, துயருக்கு பின் தொல்லை நினைவுகளென்று நாட்களும் புலம்புவதில்லை, பாதையும் தெரியும் பயணமும் தொடரும்...

❖

அவ்வப்போது நெருக்கடியிலிருக்கும் மனதிற்கு நெருக்கங்கள் தேவைப்பட்டாலும், நெருடல்கள் ஏற்படும்...

❖

58

வேண்டாமென்று விலகுவதற்குள் வேண்டுமென்று
அணைத்துக் கொள்ளும் சண்டைகளிட ஆசை அவளுடன்...

❖

தெரியாமல் தொலைத்திருந்தால் தேடிக் கொள்ளலாம்
அறியாமல் கலைத்திருந்தால் கனவை மீட்டுக் கொள்ளலாம்
புரியாமல் பிழைச் செய்திருந்தால் நிஜத்தை திருத்திக்
கொள்ளலாம் ஆனால் நானோ..!!! தெரிந்தும், அறிந்தும்,
புரிந்தும் செய்திருக்கிறேன், இனி சிறிதும் அருகதை இல்லை
என்னை மீண்டும் காதல் செய்யக் கேட்க அவளிடம்...

❖

அவள் நெற்றியில் முத்தமிட்டுச் சொன்னேன் அன்று நீயளித்த உணர்வும், இன்று வரை என்னை சபித்துக் கொண்டு தான் இருக்கிறதென்று, வழக்கம் போல் இதற்கும் பதிலளிக்கவில்லை அவள் புகைப்படம்...

❖

61

உன் சத்தம் நான் கேட்டுக் கொள்கிறேன், உன் கண்ணீர் நான் ஏந்திக்கொள்கிறேன், எப்போது வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும், என்றது என் தலைகாணி...

❖

ஏழைச் சிரிப்பில் இறைவனைப் பார் என்பதில் சிறு திருத்தம்,
காந்தியின் புன்னகை அச்சடித்த தாளை கண்டால் தான்
இறைவன் கூட புன்னகைச் செய்வார் நம்மை பார்த்து.💯

❖